# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 43 | 01.05.2023 (திங்கட்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00


# தமிழ் மக்கள் பலமடையாத வரை யாருடனும் பேரம் பேச முடியாது!

## அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்



பக்கம் 5

மாவீரர் துயிலுமில்லங்களில் முன்னாள் கண்ணீர் வடிக்கின்றோம். ஆனால் வாக்குகள் உரியவர்களை சென்று சேர்வதில்லை. கடந்த காலங்களில் முன்னாள் போராளிகள் அனைத்து கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டபோதும் மக்கள் அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யவில்லை. தமிழ் மக்கள் பலமடையாத வரை யாருடனும் பேரம் பேச முடியாது என அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தெரிவித்தார்.

## வடக்கில் காணியற்ற ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு விரைவில் காணி

# ஆளுநர் தெரிவிப்பு



பக்கம் 5

வட மாகாணத்தில் காணி அற்றவர்கள் மற்றும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளின் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.



பக்கம் 6

## தணியாத தாகம்

# தன்மானத் தமிழ் அரசு!

## கிளிநொச்சியில் சிறீதரன் தலைமையில் மே தினம்!

# தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் பின்னடிப்பு – ஜனாதிபதி



நாட்டின் நீண்டகாலமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 5


## யாழில் மோட்டார் சைக்கிளும் காரும் மோதி கோர விபத்து:

# நால்வர் காயம்! இருவர் ஸ்தலத்தில் பலி



பக்கம் 5

# இரவோடு இரவாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் நடவடிக்கை எடுக்கத் தவறிய திணைக்களம்!



பக்கம் 5

வவுனியா, கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான குளத்து நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்தி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பட்டாணிச்சூர்

தேசியம்
ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339

மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com

இணையம் : www.thesiyamnews.com

## மே தினம் ஆட்சியாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் சொல்லும் செய்தி என்ன ?

நேற்று சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி, இந்த நாட்டுக்காக உழைக்கும் தொழிலாளர்களின் மேன்மையை உலகறிந்த நாள். அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிந்த நாள். கல்லுடைக்கும் தொழிலாளி முதல் கம்ப்யூட்டரில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வரை அனுஷ்டிக்கும் ஒரு நாள். இந்த மே தினம் வந்தால் நாம் அதிகமாக கேட்பது தொழிலாளர்கள், உழைப்பு, சமூக வாதிகள், போராட்டம், பேரணி, இடதுசாரிகள். தொழிலாளர் தினம் வந்தாலே நாம் இந்த சொற்களை தான் அதிகமாக கேட்டு இருக்கின்றோம். தொழிலாளர் தினம் தொழிலாளர்களுக்கு தானே. ஆனால் பல வருடங்களாக தொழிலாளர் தினத்தை அனுஷ்டித்தது அரசியல்வாதிகள் மட்டுமே.

நூறாண்டுகளுக்கு முன் போராடிப் பெற்ற 8மணி நேரம் வேலை என்கிற உரிமையை பறிக்க எவர் நினைத்தாலும் ஒன்றுபட்டு அதனை முறியடிப்போம், தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்டுவோம் என்று பல போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றன. ஆனால் இன்று இளசுகள் முதல் வயது முதிர்ந்தோர் வரை 24 மணி நேரம் வேலை செய்தாலும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. நாட்டில் ஒரு சில ஊழல் அரசியல் வாதிகள் செய்த ஊழல் நிறைந்த ஆட்சியினால் பாட்டாளி மக்கள் தான் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடி அதிகரிப்பதால் மக்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. கிடைக்கும் ஊதியத்தை கொண்டு வறுமையை போக்க வழியும் இல்லை. மக்கள் வாழ வழியின்றி திண்டாடுகின்றார்கள் ஊழல் அரசியல்வாதிகள் கொண்டாடுகின்றார்கள்.

வழக்கமாக மேதின மேடைகளை அரசியல் வாதிகள் தான் அலங்கரிப்பார்கள். ஆனால் இம்முறை மேதினத்தில் அரசியல்வாதிகள் வாயடைத்து போயுள்ளனர். காரணம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. நாட்டில் தொடர்ந்தும் ஆங்காங்கே போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. சில அரசியல்வாதிகள் எங்கே வெளியில் வந்தால் அடி வாங்க வேண்டி வரும் என தமது வீடுகளிலேயே முடங்கி விட்டனர். இனியும் மக்களை ஏமாற்ற முடியாது இளைஞர்கள் விழித்து கொண்டனர் என்ற செய்தியை இம்முறை மேதினம் அரசியல்வாதிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் எடுத்துகாட்டியுள்ளது. இனி வரும் அடுத்த அடுத்த தேர்தல் மேடைகளில் அரசியல்வாதிகள் செய் அல்லது செத்துமடி என்னும் வாசகத்தை தாரக மந்திரமாக உச்சரிக்க கூட வாய்ப்புள்ளது.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# மே தினத்திற்கான எதிர்ப்பை வெளியிட்டு சர்வதேசத்தின் கவனத்தையீர்க்கும் உறவுகளின் போராட்டம்!



கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த போராட்டம் இன்று காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் முன்பாக ஏ9 வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

இன்றைய மே தினத்திற்கான எதிர்ப்பை வெளியிட்டும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக 2261வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளிற்கு நீதி கோரியே இன்றும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு செய்திகள் ■ கிளிநொச்சி

# மே தினத்தை முன்னிட்டு ப்றொடெக்ட் சங்கத்தின் கவனயீர்ப்பு போராட்டம்



மே தினத்தை முன்னிட்டு முறைசாரா துறையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ஹட்டனில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

ஹட்டன் மல்லியப்பு சந்தியில் 'ப்றொடெக்ட்' சங்கத்தின் உப தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் 100ற்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

வீட்டுத் தொழிலாளர்களும் தொழிலாளர்களே, அவர்களின் தொழில்சார் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என பல கோரிக்கைகள் இதன்போது விடுக்கப்பட்டது,

மேலும் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோஷங்கள் எழுப்பியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய செய்திகள் ■ ஹட்டன்

# தோட்ட காட்டான் என அழைக்காதே; மேதினத்தில் கவனம் ஈர்த்த பதாகை!

தொழிலாளர் தினமான இன்று (01) காலை 8 மணி முதல் 12 மணி வரை தனி மனித போராட்டத்தை நோர்வூட் எரிபொருள் நிரப்பும் நிலையம் முன்பாக உள்ள சந்தியில் நபர் ஒருவர் பாலத்தின் மீதேறி நடத்தினார்.

அவர் ஏந்தியிருந்த பதாகையில், பெருந்தோட்ட தொழிலாளர்களை, 'தோட்ட காட்டான்' 'வத்து தெமழு' என்று கூறுவதை உடன் நிறுத்த வேண்டும். பொருட்கள் விலை உயர்ந்த நிலையில் உள்ளது.

அதனைக் குறைக்க ஆட்ச்சியாளர்கள் முன்வரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்திருந்தார். அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களை இனி வரும் காலங்களில் பண்ணையாளர்கள் எனவும், பெருந்தோட்ட பண் ணையாளர்களை இனி வரும் காலங்களில் தமிழர்கள் எனவும், அழைக்கப்பட வேண்டும் என்றார்.

இதில் , டிக்கோயா, வனராஜா தோட்டத்தில் வசிக்கும் அன்புராஜ் என்ற தொழிலாளியே இவ்வாறு தனிமனித போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்,

மத்திய செய்திகள் ■ நோர்வூட்



# யாழில் நிதி திரட்டும் நடைபயணத்தை ஆரம்பித்த ஐக்கிய ராஜ்யத்தை சேர்ந்த இளைஞன்..!

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் குறித்த அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான நடைபவனியில் பிரித்தானியாவை சேர்ந்த இளைஞன் ஒருவர் 55 கிலோ மீற்றர் வரை நடை பயணம் மேற்கொண்டு நிதி திரட்டி அதனைக் கொண்டு வறிய மக்களுக்கான தேவைகளை பெற்றுக் கொடுக்கவுள்ளார்.

நடை பயணம் பருத்தித்துறை வீதி ஊடாக பருத்தித் துறைமுனையை அடைந்து மீண்டும் புத்தூர் சந்தியில் நிறைவடையவுள்ளது.

இதன்மூலம் கிடைக்கப்பெறும் பணத்தினை கொண்டு குடிநீர் அற்ற மக்களுக்கு கிணறுகளை அமைத்துக் கொடுத்தல் மற்றும் வீடற்றோருக்கு வீடுகளை கட்டிக் கொடுத்தல் பாடசாலைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றிற்காக செலவிடப்படவுள்ளது.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்







# சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழில் வாகன ஊர்வலம்..!

**வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தினத்தில் வாகன ஊர்வலமொன்று யாழ்.நகரில் நடைபெற்றது. இதன்போது மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவப்பு கொடியை கட்டியவாறு ஊர்வலம் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து இன்றைய தினம்(திங்கட்கிழமை) காலை 08.30 மணியளவில் மோட்டார் வாகன ஊர்வலம் ஆரம்பித்து யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நிறைவுபெற்றது.**



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் தொழிலாளர் தினம் !!







தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் தமிழ் தேசிய தொழிலாளர் தினம் மல்லாவியில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது

மல்லாவி நகரின் அனிஞ்சியன்குளம் பாட சாலைக்கு முன்பாக ஆரம்பமான மேதின ஊர்தி பவனி மல்லாவி நகரின் ஊடாக மல்லாவி சிவன் ஆலய வளாகத்தை அடைந்து அங்கு மேதின கூட்டம் இடம்பெற்றது

குறித்த மேதின ஊர்தி பவனியில் நில ஆக் கிரமிப்பு மற்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு என்பவற்றுக் கெதிராக அடையாளங்களை தாங்கிய ஊர்தியுடன் மக்கள் வருகை தந்தனர்.

மேலும் வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், தமிழர் கடல்,நில வளங்களை சுரண்டாதே, இந்த மண் எங்களின் சொந்த மண் போன்ற கோசங்களை எழுப்பி பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்

அங்கு மக்கள் மத்தியில் மேதின பிரகடனம் வாசிக்கப்பட்டது அதேவேளை குறித்த பேரணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு செய்திகள் ■ மல்லாவி

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதினக்கூட்டமும், ஊர்வலமும் வவுனியாவில்..!











புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் பிரதான மேதினக்கூட்டமும், ஊர்வலமும் வவுனியாவில் இன்று(01) காலை இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கடைவீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகர மண்டபத்தை அடைந்தது. அங்கு மேதினக் கூட்டம் இடம் பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைத்தலைவர் பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன், பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினி ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

ஊர்வலத்தின் போது விலையேற்றத்தைக் கண்டித்தும், தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் செயற்பாட்டை கண்டித்தும் கோசங்கள் எழுப்பபட்டதுடன், ஜஎம்எப் உடன்படிக்கை சித்தரிக்கும் ஊர்தியும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தது.

குறித்த ஊர்வலத்தில் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கு செய்திகள் ■ வவுனியா

# வவுனியாவில் இடம்பெற்ற அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மேதினம்!



அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இன்று(01) இடம்பெற்றது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற மேதினக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஊழியர் நலன் சார் பல்வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

வடக்கு செய்திகள் ■ வவுனியா

# சமூக ஒற்றுமையுடன் எதிர்காலத்தை தூக்கி நிறுத்த உழைப்பாளர் தினத்தில் உறுதிபூணுவோம்..! யோகேஸ்வரி தெரிவிப்பு!



உழைப்பவர்களே உலகின் உன்னத மானவர்கள். அதனால் தான் அவர்களின் உன்னத உழைப்பின் மகிமையை போற்று இந்த உழைப்பாளர் நாள் உலகமெங்கும் மே மாதம் இன்றைய நாளில் அனுஸ்டிக்கப்படுகின்றது என யாழ் மாநகரசபையின் முன்னாள் முல்வர் திருமதி யோகேஸ்வரி பற்கணராஜா தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உழைப்பாளர் தின கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்

எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைப் பொறுத்தளவில் அதன் ஒவ்வொரு துறை சார் வேலைகளை எடுத்துக் கொண்டாலும் அதை மேற்கொள்பவரது உழைப்பு உழைப்பின் வெகுமதியாகவே பார்க்கப்படுகின்றார்கள்.

அதுமட்டுமல்லாது அவர்களது உழைப்பிற்கேற்ற வகையில் அவரவர் பொறுப்புகளும் வாய்ப்புகளும் அவர்களை சென்றடைகின்றது.

யாழ் மாவட்டத்தை பொறுத்தளவில் குறிப்பாக யாழ் மாநகர அதிகாரத்துக்குள் துரையப்பாவின் காலத்துக்கு பின்னர் இன்று வரை வறிய நிலையிலுள்ள பாமர மக்களுக்கு பாரபட்சமின்றி அரச தொழில் வாய்ப்புகளை வழங்குவதானாலும் சரி அவர்களுக்கான அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார தேவையாக இருந்தாலும் சரி அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளானாலும் சரி அவற்றுக்கெல்லாம் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதில் எமது கட்சியும் அதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் மட்டுமே உரிமையாளர்களாக இருக்கின்றனர். அதுமட்டுமல்லாது எமது தேசத்து பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பொருளாதார பிரச்சினைகள் என பல்வேறு தேவைகளுக்கும் ஆண்களு க்கு சரிநிகரான சந்தர்ப்பங்கள் வழங்கி பெண்களை அவர்களது உழைப்பால் தலைதூக்க செய்வதிலும் எமது கட்சி வரலாறு படைத்துள்ளது.

தமது வாழ்வாதாரத்துக்கான பொருளாதார ஈட்டல் எனச் சொல்லிக் கொண்டு இந்த தேசத்திற்காக துப்புரவுப் பணிகளிலிருந்து பொருளாதார வல்லநர்கள் வரை உழைக்கும் பாமர மக்களுக்கு அவரவர் திறமைகளை இனங்கண்டு சந்தர்ப்பங்களை உருவாக்கி கொடுத்த பெருமையும் எமது கட்சிக்கு உண்டு.

அதேநேரம் வேற்றுமைகள் பாரபட்சங்கள் என்ற எண்ணக்கரு இல்லாது அனைவரது உழைப்பிற்கும் அதற்கேற்ற அங்கீகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எமது கட்சியின் தலைமை உறுதியாக உள்ளது.

இதனால் தான் அரச பதவிநிலைகளில் ஒரு குறிப்பிட்ட தரப்பினரை தவிர ஏனையோருக்கு அது எட்டாக்கனி என்றிருந்த காலச் சூழலை தகர்த்து பாமர மக்களும் அரச பதவிகளை அலங்கரிக்க செய்தவர் எமது கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. அதனால் தான் இன்றும் பாமர மக்களின் நாயகனாக அவர் வலம்வந்து கொண்டிருக்கின்றார்.

அந்தவகையில் இவ்வாண்டும் கடந்த ஆண்டுகளை போன்று உழைப்பாளர் தினம் வந்து போய்விட்டது. ஆனால் அந்த உழைப்பாளர் தினம் எடுத் துச் சொல்லிச் சென்றிருக்கும் உணர்வுகளையும் வரலாற்று படிப்பினைகளையும் நம் எமது செஞ்சங்களில் சுமந்தவர்களாக பேதங்களின்றி “ஒன்றே குலம் ஒரு வதே தேவன்” என்ற சமூக ஒற்றுமையுடன் எமது எதிர்காலத்தை தூக்கி நிறுத்த இந்த உழைப்பாளர் தினத்தில் உறுதி பூணுவோம் என்றும் அவர் தெரிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# கிளிநொச்சியில் பெருமளவான மக்களின் பங்கேற்புடன்

## சமத்துவக் கட்சியின் சமத்துவ மேதினம்





அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் எனும் தொணிப்பொருளில் சமத்துவக் கட்சியின் மே தினம் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இன்று பெருமளவான மக்களின் பங்கேப்புடன் இடம்பெற்றது.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் தலைமையில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் மாவட்டத்தின் பல்வேறு தொழிற்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் சிவில் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பெருளமானவர்கள் கலந்துகொண்டனர்.

பல தொழிற்ச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இங்கு உரையாற்றி சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார்– நாட்டில் சுதந்திரத்தையும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்குவதற்குப் பதிலாக அதற்கு எதிராகவே ஆட்சி நடாத்தப்படுகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு சிந்திய கண்ணீரும் இரத்தமும் கொஞ்சமல்ல. இதிலிருந்து நாம் மீள வேண்டும். இனியும் சம்பிரதாயமான அரசியல் வாக்குறுதிகளை நாம் நம்ப முடியாது. சம்பிரதாயமான மேதின நிகழ்வை நடாத்துவதில் அர்த்தமில்லை.



இன்று பிற நாடுகளிலும் சர்வதேச வங்கிகளிடத்திலும் அடமானமாகியுள்ள நாட்டில் நாம் போராடாமல் இருக்க முடியாது. எமது போராட்டம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானதாக இருக்கட்டும். மக்களின் விடுதலையை நோக்கியதாக அமையட்டும். எனத் தெரிவித்தார்.

வடக்கு செய்திகள் ■ கிளிநொச்சி



# இலங்கை தமிழ் அரசு கட்சியின் உழைப்பாளர் தின நிகழ்வு!

இலங்கை தமிழ் அரசு கட்சியின் கிழக்கு மாகாண உழைப்பாளர் தின நிகழ்வு இன்று மட்டக்களப்பு களுவண்கேனி பத்தினி அம்மன் ஆலயத்திற்கு அருகில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடிஸ்வரன் உள்ளிட்ட உறுப்பிர்களும், மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரன் மற்றும் சிறிநேசன் தமிழரசு கட்சியின் முன்னாள் செயலாளர் துரைராஜசிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் முதலில் இந்து கிறிஸ்தவ மத குருமார்களினால் மங்கள விளக்குகேற்றப்பட்டு பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டு விளக்கேற்றினர்.





கிழக்கு செய்திகள் ■ மட்டக்களப்பு

## தமிழ் மக்கள் பலமடையாத...

யாழில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தொழிலாளர் தின பொதுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் ஆயுதப் போராட்டங்கள் நசுக்கப்பட்டதைப் போல் அறகலயும் நசுக்கப்பட்டது. இந்தியாவில் தோன்றிய வேளான் பசுமை போராட்டம் மற்றும் ஏனைய போராட்டங்களுடன் ஒப்பீட்டளவில் வினைத்திறனானது. இந்த நாடு அரை நூற்றாண்றாண்டில் நான்கு போராட்டங்களை ஒடுக்கியிருந்தது.

இப் போராட்டத்தில் மேற்கத்தேய தூதரகங்கள் பின்னணியில் ஆதரவு வழுங்கின. அந்த போராட்டத்தின் நன்மைகளை மேற்கு நாடுகள் தமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டன.

இதிலிருந்து தமிழ் மக்களுக்கு ஒரு பாடமுள்ளது. ஆளும் இனமென்றாலும் சரி வேறெந்த இனமாகவும் இருந்தாலும் சரி போராட்ட கனியை பறிப்பது நாட்டின் வெளியேயுள்ள வேறொரு தரப்பாகும்.

எந்தவொரு அரசும் நீதியின் பால் உதவ மாட்டார்கள் தங்களின் நலனின் அடிப்படையில் தான் உதவுவார்கள். இந்த வகையில் ஈழத் தமிழினமும் நலன்களின் பால் பேரம் பேசுதலை அடிப்படையாகக் கொண்டு கையாள வேண்டும்.

அவர்களுடைய நலன்களும் எங்களுடைய நலன்களும் சந்திக்கும் பொதுப் புள்ளியைக் கண்டறிய வேண்டும். தமிழ் மக்கள் பலமடையாத வரை யாருடனும் பேரம் பேச முடியாது.

எந்தவொரு அரசும் நலனின் அடிப்படையில் உதவும் என்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியே உதாரணமாகும்.

கனடாவில் போர்க்குற்றம் தொடர்பாக 4 பேருக்கு தடை விதித்துள்ளது. சீனாவை நோக்கி சாயும் இலங்கையின் வரையறையை உணர்த்துவதற்காகத் தான். அதை புலம்பெயர் தமிழ் சமூகம் ஆரோக்கியமாக கையாண்டு வெற்றிகண்டுள்ளது.

இனப்படுகொலை பிரேரணை தனிப்பட்ட தீர்மானமாகத் தான் கனடாவில் வந்தது. ஆனால் அது கனேடிய அரசின் தீர்மானமில்லாமையானாலும் அதை அனுமதித்தது அரசியல் நோக்கத் தீர்மானமாகும்.

இந்த அடிப்படையில் வெளியரசுகளுடன் உறவுகளை வைத்துக் கொள்ளும் போது நலன்களின் அடிப்படையில் விஞ்ஞான பூர்வமாக அறிவுபூர்வமாக பேரம் பேசுதலை முன்வைக்க வேண்டும்.

நாம் கடந்த 13 ஆண்டுகளாக .ஒரு தேசமாக இல்லாமல் சிதறிப்போயுள்ளோம். மதத்தின் பேரால் எம்மை பிரிக்கும் சக்திகள் தீவிரமடைந்துள்ளன. நாடாளுமன்றத்தில் நடக்கும் சொற்போர்களை யூரியூப்களில் கண்டு களிப்பவர்களாக மாறிவிட்டோம்.

நாங்களே எங்களைத் துரோகிகளாலும் கட்சிகளும் அமைப்புக்களும் புலம்பெயர் சமூகமும் பிரித்து சிதறிப்போயுள்ளோம். இப்படியெல்லாம் போராடிய மக்களா என மற்றவர் பார்த்து கேட்குமளவிற்கு மாறிவிட்டோம்.

ஒரு தனிமனிதன் ஒரு வார்த்தையை தவறுதலாக வெளியிட்டவுடன் அவரின் கடந்தகால செயற்பாட்டைப் பற்றி மறந்து கீழ்த் தரமாக விமர்சிக்கும் சமூகமாக மாறியுள்ளோம்.

வெடுக்குநாரி மலையில் சட்ட ரீதியாக வெற்றி கிடைத்த சம நேரத்தில் தையிட்டியில் பஞ்சஈச்சரத்தை விட உயர்வான விகாரையொன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதனை யாராலும் தடுக்க முடியவில்லை.

மாவீரர் துயிலுமில்லங்களில் முன்னாள் கண்ணீர் வடிக்கின்றோம். ஆனால் வாக்குகள் உரியவர்களை சென்று சேர்வதில்லை. கடந்த காலங்களில் முன்னாள் போராளிகள் அனைத்து கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டபோதும் மக்கள் அவர்களுக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்யவில்லை.

எம்மை விட பலமான சிங்கள மக்கள் தன்னெழுச்சியாகப் போராடி என்ன நடந்தது என்பதை அவதானிக்க வேண்டும். ஆகவே ஒன்றுபட்ட மக்கள் கூட்டமாக பயணிக்க வேண்டும். – என்றார்.

## வடக்கில் காணியற்ற ஒரு...

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், வடமாகாணத்தில் காணி அற்ற வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கான நன்கொடைக் காணிகள் வழங்கும் செயற்பாடுகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

அதேபோன்று காணி அற்ற அரச உத்தியோகத்தர்களுக்கும் குத்தகைக்கு மற்றும் வீடுகளை கட்டுவதற்கு காணிகள் வழங்கும் செயற்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது.

வடமாகாணத்தில் சுமார் 4 இலட்சம் மரங்கள் ஒவ்வொன்றிற்கும் 1:5 என்ற விகிதத்தில் மரங்களை நாட்டுவதற்கும் புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது வழங்கப்படும் காணி துண்டுகளில் ஏற்கனவே உள்ள பயன் தரும் மரங்கள் அல்லது காணி துண்டுகளில் நடுகை செய்யும் மரங்களுக்கான இலவச ஆலொசனைகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மாகாண அமைச்சுக்களின் அதிகாரிகள் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச குழுக்கள் இணைந்து பணியாற்றுவதற்கான செயற்றிட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதன் மூலம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் 10 பேர்ச் அரச காணிக்கு உரிமையாளராக மாறுகின்ற நிலை காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் மோட்டார் சைக்கிளும்...

யாழ்ப்பாணம் - அல்லைப்பிட்டிப் பகுதியில் இன்று மாலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றொரு பெண் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளும் காரும் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. காரில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை அளிக்கப்படுவதாக பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்கள் இருவரே மோட்டார் சைக்கிளில் பயணித்தனர் எனவும் அவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டடனர்.

மானிப்பாயைச் சேர்ந்த நால்வர் காரில் பயணித்தனர். அவர்கள் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர் பிரச்சினைகளுக்குத்...

தமிழ் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் பின்னடிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் நீண்டகாலமாக இருக்கும் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இது மிகவும் முக்கியமானது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய நியாயமான, புதிய போட்டித்தன்மையுள்ள மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

ஆகவே அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

## இரவோடு இரவாக ஆக்கிர...

புளியங்குளத்தின் குருமன்காட்டுக்கு அண்மித்த மன்னார் வீதி ஓரமாகவுள்ள நீரேந்து பிரதேசத்தை ஆக்கிரமித்து சில நபர்களால் கம்பி கட்டை போடப்பட்டு வேலி அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த நீரேந்து பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றினை அண்மித்தே வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே, அப்பகுதிக்கு அண்மையாக ஒரு பெண் தனது வீட்டினை அண்மித்த காணித் துண்டம் ஒன்றினை வேலியிட்டு அடைத்த போது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினர் ஜேசிபி இயந்திரத்துடன் சென்று வேலிகளை அகற்றியதுடன், அப் பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தனர்.

ஆனால், தற்போது, இரவோடு இரவாக குறித்த பகுதியில் கம்பி வேலி அமைக்கப்பட்டு நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போதும் உரிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.





## No Comments!



## தவற விட்ட தங்கசங்கிலியை கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்த சிறுமிக்கு குவியும் பாராட்டுக்கள்



இரணைமடு கனகாம்பிகை ஆலய திருவிழாவான 6ம் நாள் பகல் திருவிழாவில் ஆலயத்தில் ஒரு அடியவர் ஒருவரினால் 1 1/2 பவுன் தங்கச்சங்கிலி தவறவிடப்பட்டது.

பல முறை தேடியும் தங்க ஆபரணம் கிடைக்கவில்லை. அங்கு குடியிருந்த அடியவர் பலரின் கருத்து இதுவாக இருந்தது இப்போது தங்கப்பவுண் விற்கின்ற விலைக்கு கண்டெடுத்தவர்கள் தருவார்களா?

என்பதுதான் பலரது கதையாக இருந்தது. தங்கச்சங்கிலியை தவறவிடவர் அன்னையை வேண்டிக்கொண்டிருந்த வேளை கனாகம்பிகையின் அருளும் சிறுமியின் செயலும் சிலரை சிந்திக்க வைத்தது. எப்படி என்றால் தவறவிட்ட தங்கச்சங்கிலியானது 4 1/2 வயது குழந்தையின் கண்ணில் பட்டிருக்கின்றது கண்டெடுத்த தங்கச்சங்கிலியை உரியவரிடம் ஒப்படைத்திருந்தார். அதன் காரணமாக சிறுமிக்கு கனகாம்பிகை அம்பாள் ஆலய பரிபாலன சபையினர் வாழ்த்துக்களையும் அன்பளிப்பு பரிசில்களையும் வழங்கி கௌவப்படுத்தியிருந்தார்கள்.

தேசியம்
THESIYAM

# தணியாத தாகம்
# தன்மானத் தமிழ் அரசு!




























தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வு இன்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் மிகவும் எழுச்சிப்பூர்வமாக நடைபெற்றது. சமகாலத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சகலவிதமான ஒடுக்குமுறைகளையும் எதிர்த்தும், தாயகம் விடியும் வரை தமிழினம் ஓயாது எனும் அடிப்படையில் இளைஞர் யுவதிகளின் பெரும் திரட்சியுடன் நடைப்பெற்றது.